காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு. M. தங்கராஜ் அவர்கள்

ந.க.எண். : 04 / 2023 - 2024 **நாள்: 04.09.2023**

பொருள் : கோயம்புத்தூர் மாவட்டம் - அன்னூர் வட்டம் - காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்கள். 633/1B, 2, 3A2, 3B2, 4B & 668/3A ல் 8.18¾ ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கும் மனைப்பிரிவிற்கான ஊராட்சி அனுமதி வழங்கி உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை :
1. சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு தானப்பத்திரம் மூலம் வழங்கியது - பத்திரப்பதிவுத்துறை எண். 6287/2023.
2. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு, கோயம்புத்தூர், அவர்களின் நடவடிக்கைகள் இணையதள கடிதம் ROC NO. XZN7A6KG/2022/TCP/DATE: 12.05.2023.

உத்தரவு:

பார்வையில் குறிக்கப்பட்டுள்ள அனைத்து கடிதங்கள் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு, கோயம்புத்தூர் அவர்களின் இணையதள கடிதம் ROC NO. XZN7A6KG/2022/TCP/DATE: 12.05.2023 ன் படி கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண். 633/1B, 2, 3A2, 3B2, 4B & 668/3A ல் 8.18¾ ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ./கோ.மா.எண். 154/2023 (இணையவழி ஒப்புதல்) என எண்ணிட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும் மேலும் மேற்கண்ட மனைப்பிரிவில் காரேகவுண்டன்பாளையம் ஊராட்சிக்கு தானமாக வழங்கக்கூடிய சாலைகள் மற்றும் பூங்காவிற்கான பொது திரவிடங்கள் சேர்த்து அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண பதிவு எண். 6287/2023, நாள்: 10.05.2023 என்ற பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு நிலத்திற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு, கோயம்புத்தூர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 3% தொகையாக கட்டணம் ரூ.1,22,850/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) கருவூல சலான் எண். 20230829014182 / நாள்: 29.08.2023 என்ற சலான் மூலம் 04.09.2023 அன்று பாரத ஸ்டேட் வங்கி, அன்னூர் கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி-2

ஊராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி கட்டணம் ரூ. 1,25,000/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) ரசீது எண் 66278 / நாள்: 04.09.2023 மூலம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவிற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இதன் மூலம் ஊராட்சியால் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு எடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் Rail Carridors, பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம் அதிக உயர் மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.
2. மனைப்பிரிவு கட்டமைப்பு இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு அமைக்காவிட்டால் அங்கீகாரம் இரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்து வில்லங்க சான்றின் சரித்தன்மையை உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு தீர்மானம் ஏற்று இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதும் சட்டப்பூர்வ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்
காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி
காரேகவுண்டன்பாளையம் ஊராட்சி

இணைப்பு : வரைபடம்

பெறுநர்

MS AMOHA FIELDS,
எண். 15/1A, A-9. வளர்மதி காம்ப்ளக்ஸ்,
வளர்மதி சர்வீஸ் ஸ்டேசன் ரோடு,
பல்லடம், திருப்பூர்.

நகல்:

1. இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.
2. சார்பதிவாளர் அவர்கள்,
அன்னூர்.